ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திருப்பத்தூர் மாவட்ட கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

ந.க.எண். 09/ஒபக/SMC/2022 நாள்:13.04.2022

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி- திருப்பத்தூர் மாவட்டம்- அனைத்து அரசு பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு வழிகாட்டுதல்கள் மற்றும் கால அட்டவணை அனுப்புதல்- சார்பு.

பார்வை : மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.449/C7/SS/SMC/2021 நாள்: 12.04.2022.

-----------------------

பார்வையில் காணும் மாநில திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகளுக்கிணங்க பள்ளி மேலாண்மைக் குழுக்களை வலுப்படுத்தவும், மறுகட்டமைப்பு செய்வதற்கும் பள்ளி அளவில் தெரிவு செய்யப்பட்டுள்ள பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

மாநிலம் தழுவிய பள்ளி மேலாண்மைக் குழு சார்ந்த பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம் : **20.03.2022** காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை நடத்தப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து பெற்றோர்கள் கூட்டத்தில் ஏப்ரல் முதல் வாரத்திலிருந்து மறுகட்டமைப்பு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து மறுகட்டமைப்பு (உறுப்பினர்கள் தெரிவு) செய்வது தொடர்பான கால அட்டவணை மற்றும் நடைபெறும் நாள் கீழ்கண்டவாறு நடத்திட அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள்(பொ) அறிவுறுத்தப்படுகிறார்கள்.

| வ. எண். | மறுகட்டமைப்பு நடைபெறும் நாள் | பள்ளி வாரியாக |
|---|---|---|
| 1 | 23.04.2022 | நடுநிலைப்பள்ளி |
| 2 | 30.04.2022 | 50% தொடக்கப்பள்ளி (முதற்கட்டம்) |
| 3 | 07.05.2022 | 50% தொடக்கப்பள்ளி (இரண்டாம் கட்டம்) |
| 4 | ஜூன் 4வது வாரம் | உயர்நிலை மற்றும் மேல்நிலை |

மேற்காண் கால அட்டவணையை பின்பற்றி மறுகட்டமைப்பு சிறப்பாக திட்டமிட்டு எவ்வித புகாருக்கும் இடமளிக்கா வண்ணம் நடத்திடவும், மேலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாநில திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறை கடித நகல்கள் அனைத்தும் பள்ளிகளுக்கு அனுப்பி வைத்து பள்ளிகளில் ஒரு நகல் (Printout) எடுத்து வைக்குமாறு தலைமையாசிரியர்களுக்கு தகவல் தெரிவிக்குமாறு அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள்(பொ) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் முதல் மற்றும் இரண்டாம் கட்டமாக நடைபெறும் தொடக்கப்பள்ளிகளின் பெயர் பட்டியலை மாவட்ட திட்ட அலுவலகத்திற்கு **19.04.2022** அன்று தவறாமல் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.